# இடர்கால வாராந்தப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்

## கல்விப்பொதுத்தராதர உயர்தரம் - தமிழ் (72)

தரம் - 12 ஆசிரியை : திருமதி.R.ரேணுகா தேவி

வாரம் - 14 இ/இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயம்

தவணை - 03

---

தேர்ச்சி : 3.0 உரைநடை இலக்கியங்களை கற்று அவை கூறும் விடயங்களையும் தமது கருத்துக்களையும் செம்மையான மொழிநடையில் முன்வைப்பார்.

தேர்ச்சி மட்டம் : 3.2 இலக்கியங்கள் தோன்றிய பின்னணியை அறிந்து கூறுவார்

விடயம் : கம்பராமாயணம் - குகப்படலம் (24 – 43)

- சுமந்திரன் குகனைப்பற்றி பரதனுக்கு விளக்குதல்.
- குகனைக் காண பரதன் கங்கையின் வடகரை அருகில் விரைதல்.
- பரதன் நிலை கண்டு, குகன் திடுக்கிடுதல்.
- குகன் நாவாயில் தனியே கங்கையின் வடகரை வந்து சேரல்.
- குகனும் பரதனும் ஒருவரை ஒருவர் வணங்கித் தழுவுதல்.
- குகன் பரதனிடம் வந்த காரணம் கேட்டல்.
- பரதனைக் குகன் வணங்கிப்பாராட்டி நெகிழ்தல்.
- குகன் பரதனிடத்து கொண்ட பேரன்பு.
- இராமன் தங்கிய இடத்தை பரதன் குகனிடம் விசாரித்தல்.
- இராமன் வைகிய இடம் கண்ட பரதன் நிலையும் நினைவும்.
- இலக்குவன் யாது செய்தனன் என பரதன் குகனை வினவுதல்.
- இலக்குவன் செயல் பற்றி குகனது விடை.
- பரதன் தன்னை நொந்து உரைத்தல்.

**<u>பின்வரும் பாடல்களை அடிப்படையாகக்கொண்டு கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.</u>**

1) 26ம் பாடல் *“கல் காணும் திண்மையான்…….”*

I. இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
II. இச்செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டுக.
III. இச்செய்யுளின் வாயிலாக விளங்கிக்கொள்ளக்கூடியவை யாவை?

2) 29ம் பாடல் *“ வற்கலையின் உடையானை………”*

I. இச்செய்யுளின் பொருளை இக்கால மொழிநடையில் எழுதுக.
II. “நகையிழந்த முகத்தான்” என குறிப்பிடப்படுபவன் யார்? அவனது தோற்றம் எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது?
III. இச்செய்யுளில் வெளிப்பட்டு நிற்கும் அணியை எடுத்துக்காட்டி விளக்குக.

3) 33ம் பாடல் *“தழுவின புளிஞர் வேந்தன்………”*

I. இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?
II. “தாமரை செம்கணான்” என அழைக்கப்படுபவர் யார்? அவனை குகன் எவ்வாறு விளிக்கிறான்?
III. பரதனின் தன்மையை கண்டு குகன் அடைந்த விளிப்பு எத்தகையது?